**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**S.C.158/2017 – P.W. – 18**

Deposition of witness for Prosecution:

Name : மருத்துவர் திரு. காமராஜ் Father's Name. ராமலிங்கம்

Village : செங்கல்பட்டு Age: 42

Date : 26.08.2025

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 26.08.2025

**(2, 4, 11 மற்றும் 13 ஆகிய எதிரிகள் ஆஜர். 1, 5 முதல் 7, 9, 10, 14, 16 முதல் 19 ஆகிய எதிரிகள் ஆஜரில்லை. அவர்களுக்காக அவர்களது தரப்பு கற்றறிந்த வழக்கிறஞர்கள் ஆஜராக அனுமதிக்க வேண்டி தாக்கல் செய்த குவிமுச.பிரிவு 317ன் கீழான மனுக்கள் அனுமதிக்கப்பட்டுள்ளது.)**

**அரசு தரப்பு முதல் விசாரணை**.

நான் தற்போது செங்கல்பட்டு அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 28.01.2010ஆம் தேதி இரவு 09.10 மணியளவில் நான் நாகப்பட்டினம் அரசு தலைமை மருத்துவமனையில் பணி மருத்துவராக பணியில் இருந்தபோது, சுமார் 56 வயது மதிக்கத்தக்க திரு. ஓ. எஸ். மணியன், த/பெ. சோமுதேவர், (பாராளுமன்ற உறுப்பினர்) தலைஞாயிறு என்பவரை சிவானந்தம் என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்திருந்தார். அவரை நான் பார்வையிட்டு, பரிசோதனை செய்தேன். அப்போது அவர் சுயநினைவுடன் காணப்பட்டார், ஆனாலும் அப்போது அவரால் தனக்கு எப்படி காயம் ஏற்பட்டது என்று கூற இயலவில்லை. அவரை சிகிச்சைக்காக அழைத்து வந்த சிவானந்தம்தான் மேற்படி திரு. ஓ. எஸ். மணியன் என்பவரை அடையாளம் தெரிந்த 20 நபர்கள் அன்று மாலை 07.15 மணியளவில், பட்டுக்கோட்டையில் இருந்து வேதாரண்யம் செல்லும் வாய்மேடு சாலையில், மருதுகடைத்தெருவில் உள்ள கந்தபவுன்ராஜ்

திருமண மண்பத்திடம் இரும்பு கம்பி, அருவாள், மரத்தடி ஆகியவைகள் வைத்து தாக்கி காயப்படுத்தியதாக கூறினார். நான் மேற்படி ஓ. எஸ். மணியனை பரிசோதனை செய்தேன். அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது.

1. இடது கண்ணில் வெள்ளை படத்தில் இரத்த கழிவு இருந்தது.
2. இடது கண்ணை சுற்றி வீக்கமும், கன்றியும் காணப்பட்டது. அதன் அளவு சுமார் 3 x 3 cm இருக்கும்.
3. இடதுபக்க மூக்கு துவாரத்தில் இரத்த கழிவு காணப்பட்டது.
4. இடதுபக்க இடுப்புக்கு கீழ் வலி இருப்பதாக கூறினார். நான் பரிசோதனை செய்தபோது அவர் கூறியவாறு வலி இருப்பது உறுதிசெய்யப்பட்டது.
5. இடதுபக்க மூக்கு தசையில் 1.5 x 0.5 x 0.5 cm கிழிந்த காயம் காணப்பட்டது.

நான் அவரை உள்நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதித்தேன். அவ்வாறு அனுமதித்ததற்கான விபத்து பதிவேட்டு ஆவணம்தான் தற்போது காட்டப்படுவது. அந்த விபத்து பதிவேட்டு ஆவணம் **அ.சா.ஆ.5**. நான் அவரை தஞ்சாவூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக செல்ல பரிந்துரை செய்தேன். ஆனால் அவர் அதுபோல செல்லவில்லை. அதனால் முதலில் அவருக்கு ஏற்பட்ட காயம் குறித்து கருத்து தெரிவிக்க இயலாது என கடந்த 31.05.2010ஆம் தேதி அ.சா.ஆ.5 ஆன விபத்து பதிவேட்டு ஆவணத்திலேயே எழுதி சான்றளித்தேன். அதனை தொடர்ந்து நாகப்பட்டினம் அரசு தலைமையிடத்து மருத்துவமனையின் அறுவை சிகிச்சை மருத்துவரின் கருத்துரை படி மேற்படி ஓ. எஸ். மணியனுக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயங்கள் என கருத்து தெரிவித்து மேற்படி அ.சா.ஆ.5 ஆன விபத்து பதிவேட்டு ஆவணத்திலேயே சான்று வழங்கினேன்.

கடந்த 28.01.2010ஆம் தேதியன்று இரவு 09.15 மணியளவில் நான் மேற்படி மருத்துவமனையில் இருந்தபோது திரு. ரவிச்சந்திரன், ஆண், வயது 44, த/பெ. தங்கையன் என்பவரை திரு. T. கலாநிதி என்பவர் சிகிச்சைக்காக ஆஜர் செய்தார். நான் அவரை பார்வையிட்டு பரிசோதனை செய்தேன். அப்போது அவர் நல்ல சுயநினைவுடன் காணப்பட்டார். அவரும் மேற்படி சம்பவத்தில் தனக்கு காயம் ஏற்பட்டதாக கூறினார். அவரை பரிசோதித்தபோது கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டது.

1. இடது கால் சுண்டுவிரலில் 1 x 1 cm அளவில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது.
2. அவர் தலை வலிப்பதாக கூறினார். ஆனால் அவரது தலையை பார்வையிட்டு பரிசோதித்தபோது வீக்கம் போன்ற எந்தவித வெளிப்புற காயங்களும் இல்லை.
3. இரண்டு கண்களும் சிவந்திருந்தன.
4. காலில் வலி இருப்பதாக கூறினார். பரிசோதனை செய்து பார்த்தபோது வலது முட்டிக்கு கீழ் 1 cm அளவில் சிறிய கன்னிய காயம் காணப்பட்டது.

அவரை உள்நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதித்தேன். அவ்வாறு அனுமதித்ததற்கான விபத்து பதிவேட்டு ஆவணம்தான் தற்போது காட்டப்படுவது. அந்த விபத்து பதிவேட்டு ஆவணம் **அ.சா.ஆ.6**. நான் அவரை தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக செல்ல பரிந்துரை செய்தேன். ஆனால் அவர் அதுபோல செல்லவில்லை. அதனால் முதலில் அவருக்கு ஏற்பட்ட காயம் குறித்து கருத்து தெரிவிக்க இயலாது என கடந்த 12.03.2010ஆம் தேதி அ.சா.ஆ.6 ஆன விபத்து பதிவேட்டு ஆவணத்திலேயே எழுதி சான்றளித்தேன். அதனை தொடர்ந்து நாகப்பட்டினம் அரசு

தலைமையிடத்து மருத்துவமனையின் அறுவை சிகிச்சை மருத்துவரின் கருத்துரை படி மேற்படி ரவிச்சந்திரனுக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயங்கள் என கருத்து தெரிவித்து மேற்படி அ.சா.ஆ.6 ஆன விபத்து பதிவேட்டு ஆவணத்திலேயே சான்று வழங்கினேன்.

கடந்த 28.01.2010ஆம் தேதியன்றே இரவு 09.20 மணியளவில் நாகப்பட்டினம் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்த என்னிடம் மூர்த்தி, த/பெ.சுப்பிரமணியன், ஆண், வயது 26 என்பவரை ராதாகிருஷ்ணன் என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். நான் அவரை பார்த்து பரிசோதனை செய்தேன். அவருக்கும் அதே சம்பவத்தில் காயம் ஏற்பட்டதாக அவரே சொன்னார். அப்போது அவர் நல்ல சுயநினைவுடன் காணப்பட்டார். நான் அவரை பரிசோதனை செய்தபோது அவருக்கு வெளிப்புற காயங்கள் எதுவும் இல்லை. வலதுபக்க தொடையில் வலி இருப்பதாக கூறினார். அவரை உள்நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதித்தேன். அதற்காக வழங்கப்பட்ட விபத்து பதிவேட்டு ஆவணம்தான் தற்போது காட்டப்படுவது. அந்த விபத்து பதிவேட்டு ஆவணம் **அ.சா.ஆ.7**. அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என கருத்து தெரிவித்து கடந்த 12.03.2010ஆம் தேதி மேற்படி அ.சா.ஆ.7 ஆன விபத்து பதிவேட்டு ஆவணத்திலேயே சான்று வழங்கினேன். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**.

**1, 4 முதல் 6, 9 முதல் 11, 13, 14, 16 முதல் 19 வரையிலான எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**.

நான் வழங்கிய அ.சா.ஆ.5 ஆன விபத்து பதிவேட்டு ஆவணத்தில் திரு. ஓ.எஸ். மணியன் என்பவரை நான் பார்வையிட்டு பரிசோதனை செய்தபோது

அவர் சுயநினைவோடு இருந்தபோதும், அவரால் பேசமுடியாமல் இருந்ததால் அவருக்கு எப்படி காயம் ஏற்பட்டது என்ற விவரத்தை அவரை சிகிச்சைக்கு அழைத்து வந்த சிவானந்தம் என்பவர்தான் கூறினார் என்ற விவரம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அவருக்கு ஏற்பட்டதாக சொல்லப்படும் காயங்கள் அனைத்தும் அவரின் உடலின் இடதுபக்கத்தில் என்று சொன்னால் சரிதான். வலி இல்லாமலே கூட வலி இருப்பதுபோல பாசாங்கு செய்யலாம் என்று சொன்னால் சரிதான். திரு. ஓ.எஸ். மணியனுக்கு ஏற்பட்டதாக சொல்லப்படும் 4வது காயம் அதுபோல வலி இல்லாமல்கூட வலி இருப்பதாக சொல்ல வாய்ப்புள்ளது. திருமண மண்டபத்தில் உள்ள படிக்கட்டில் இருந்து, கூட்டத்தில் தவறி இடதுபக்கமாக விழும்போது நான் பார்த்த காயங்கள் திரு. ஓ. எஸ். மணியனுக்கு ஏற்பட வாய்ப்புள்ளது என்று சொன்னால் வாய்ப்புள்ளது. திரு. ஓ. எஸ். மணியனுக்கு எப்படி காயம் ஏற்பட்டது என்ற விவரத்தை யார் சொல்லி அவருக்கானஅ.சா.ஆ.5 ஆன விபத்து பதிவேட்டு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டது என்றால் அப்போது மீடியா, எங்களது மருத்துவத்துறை இணை இயக்குநர் உட்பட பலர் கூட்டமாக கூடி பரபரப்பாக இருந்ததால், அவருடன் வந்தவர்களில் யார் சொல்லி மேற்கண்டவாறு காயம் ஏற்பட்டதாக அ.சா.ஆ.5 ஆன விபத்து பதிவேட்டு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டது என்று குறிப்பிட்டு கூற இயலாது. அவரை முதலில் பார்த்து, பரிசோதனை செய்து உள்நோயாளியாக அனுமதித்ததை தவிர, தொடர் சிகிச்சை எதுவும் நான் மேற்கொள்ளவில்லை. அவருக்கு நாகை அரசு மருத்துவமனையில் தொடர் சிகிச்சை அளித்த அறுவை சிகிச்சை மருத்துவர் யார் என்றும், யாருடைய கருத்துரை அடிப்படையில், அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என நான் சான்று வழங்கினேன் என்பது குறித்து குறிப்பிட்டு அ.சா.ஆ.5 ஆன விபத்து பதிவேட்டு ஆவணத்தில் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான்.

அதேபோல மேற்படி திரு. ஓ. எஸ். மணியனுக்கு என்னவகையான மருத்துவ பரிசோதனைகள் எங்களது மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்டது என்பதை காட்டுவதற்கான ஆவணங்கள் எதையும், அ.சா.ஆ.5 ஆன விபத்து பதிவேட்டு ஆவணத்துடன் சேர்த்து வழங்கப்படவில்லை என்று சொன்னால் சரிதான்.

அதேபோன்று, நான் வழங்கிய அ.சா.ஆ.6 ஆன விபத்து பதிவேட்டு ஆவணத்தில் ரவிச்சந்திரனுக்கு ஏற்பட்டதாக சொல்லப்படும் இடதுகால் சுண்டுவிரலில் இருந்த காயமானது, கூட்டத்தில் யாராவது செருப்பு காலால் மிதித்திருந்தால் ஏற்பட வாய்ப்புள்ளது என்று சொன்னால் வாய்ப்புள்ளது. அவருக்கு வலி இல்லாமல் கூட வலி இருப்பதுபோல அவர் பாசாங்கு செய்து செய்யலாம் என்று சொன்னால் சரிதான். அவரை முதலில் பார்த்து, பரிசோதனை செய்து உள்நோயாளியாக அனுமதித்ததை தவிர, தொடர் சிகிச்சை எதுவும் நான் மேற்கொள்ளவில்லை. அவருக்கு நாகை அரசு மருத்துவமனையில் தொடர் சிகிச்சை அளித்த அறுவை சிகிச்சை மருத்துவர் யார் என்றும், யாருடைய கருத்துரை அடிப்படையில், அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என நான் சான்று வழங்கினேன் என்பது குறித்து குறிப்பிட்டு அ.சா.ஆ.6 ஆன விபத்து பதிவேட்டு ஆவணத்தில் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். அதேபோல மேற்படி ரவிச்சந்திரனுக்கு என்னவகையான மருத்துவ பரிசோதனைகள் எங்களது மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்டது என்பதை காட்டுவதற்கான ஆவணங்கள் எதையும், அ.சா.ஆ.6 ஆன விபத்து பதிவேட்டு ஆவணத்துடன் சேர்த்து வழங்கப்படவில்லை என்று சொன்னால் சரிதான்.

அதேபோன்று, திரு. மூர்த்தி என்பவரும் தனக்கு எந்தவித வலியும் இல்லாமல், வழக்கிற்காக தனக்கு வலி இருப்பதுபோல பாசாங்கு செய்து என்னிடம் கூறி சிகிச்சைக்காக ஆஜராகியிருக்கலாம் என்று சொன்னால் வாய்ப்புள்ளது.

நான் வழங்கிய காயச்சான்றிதழுடன் கூடிய விபத்து பதிவேட்டு ஆவணங்களில் கடந்த 28.01.2010ஆம் தேதி சிகிச்சைக்கு ஆஜரானதாக சொல்லப்படும திரு. ஓ. எஸ். மணியன், திரு. ரவிச்சந்திரன், திரு. மூர்த்தி ஆகியோர்கள் எந்த தேதியில் சிகிச்சையில் இருந்து விடுபட்டனர் என்று குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். திரு. ஓ. எஸ். மணியனுக்கு ஏற்பட்டதாக சொல்லப்படும் காயம் குறித்து கருத்து கூற இயலாது என கடந்த 31.05.2010ஆம் தேதி அ.சா.ஆ.5 ஆன விபத்து பதிவேட்டு ஆவணத்தில் நான் சான்றளித்த பின்னர், எதற்காக, எப்போது, அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாய் என கருத்துரை தெரிவித்து அ.சா.ஆ.5 ஆன விபத்து பதிவேட்டு ஆவணத்தில் சான்றளித்தேன் என்றால் அது குறித்து எனக்கு ஞாபகம் இல்லை. அதேபோன்று, ரவிசந்திரன் ஏற்பட்டதாக சொல்லப்படும் காயம் குறித்து கருத்து கூற இயலாது என கடந்த 12.03.2010ஆம் தேதி அ.சா.ஆ.6 ஆன விபத்து பதிவேட்டு ஆவணத்தில் நான் சான்றளித்த பின்னர், எதற்காக, எப்போது, அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாய் என கருத்துரை தெரிவித்து அ.சா.ஆ.6 ஆன விபத்து பதிவேட்டு ஆவணத்தில் சான்றளித்தேன் என்றால் அது குறித்தும் எனக்கு ஞாபகம் இல்லை.

இரும்பு கம்பியால் ஒரு நபரை குத்தும்போது, அந்த நபருக்கு குத்து காயமோ அல்லது கிழிந்த காயமோதான் ஏற்பட வாய்ப்புள்ளது என்று சொன்னால் சரிதான். திரு. ரவிச்சந்திரன் கூறியதுபோல அவரை அருவாளலோ அல்லது மரக்கட்டையாலோ அல்லது இரும்பு ராடாலோ தாக்கியதற்கான காயங்கள் நான்

அவரை பரிசோதித்தபோது இருந்ததா என்றால் இல்லை. ஆனால், அவரது வலது காலில் இருந்த கன்னிய காயம் தடியால் அடிக்கும்போது ஏற்பட வாய்ப்புள்ளது. திரு. மூர்த்தி கூறியதுபோல அவரை மரக்கட்டையால் தாக்கியதற்கான காயங்கள் நான் அவரை பரிசோதித்தபோது இருந்ததா என்றால் இல்லை.

எந்தவித காயங்களும் இன்றி, எதிரிகளுக்கு எதிராக வழக்கு போடவேண்டி, மருத்துவ ஆவணங்கள் உருவாக்க அப்போதைய ஆளும் கட்சியான அஇஅதிமுக கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான திரு. ஓ. எஸ். மணியனின் அழுத்தத்தால், அவருக்கும், அவருடன் வந்தவர்களக்கும் காயங்கள் ஏற்பட்டதுபோல அ.சா.ஆ.5 முதல் அ.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் தவறாக உருவாக்கப்பட்டதால்தான் மேற்கண்ட குளறுபடிகள் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

**2 மற்றும் 7ம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

மேற்படி எதிரிகள் தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை தங்கள் தரப்பு குறுக்குவிசாரணையாக ஏற்றுக்கொள்ளவதாகவும், வேறு குறுக்கு விசாரணை இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

**மறுவிசாரணை –** இல்லை.

(ஒம்/– G. கிருஷ்ணன்)
தலைமை குற்றவியல் நடுவர்,
நாகப்பட்டினம்.